நடத்த இயலாது போனதை குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் என்பதைத் துல்லியமாக நிரூபிக்க இயலவில்லை எனவும் முடிவெடுத்து, அப்பிரச்சினை அன்றைய உரிமைக் குழுவால் கைவிடப்பட்டுள்ளது.

அன்றைய உறுப்பினர் திரு. தீர்த்தராமன் பிரச்சினை போன்றே தற்போது பரிசீலனையில் இருக்கும் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தாக்கப்பட்டது குறித்த சம்பவமும் உள்ளது. சம்பவம் நடைபெற்ற அன்றே காவல் துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அப்பிரச்சினை சட்டமன்றப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. இன்றைய நிலவரப்படி இந்த வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்டு நிறுத்தப்பட்ட சுதாகோபாலும் திரு. பீட்டர் அல்போன்சுக்கு எதிராக ஓர் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்துள்ளார். அதுவும் நீதிமன்றத்தில் குற்றவியல் தகவல் அறிக்கையோடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்காகப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள நிலையில் பேரவையும் இப்பிரச்சினயை ஆராய்ந்து நீதிமன்ற விசாரணையைத் தடைப்படுத்துவதாகவே அமையும். மேலும் மேற்கண்ட மாறுபட்ட தகவல்களில் இருந்து இப்பிரச்சினை அவை உரிமை மீறல் தான் என உறுதிபடக் கூறிட இயலாத நிலை உள்ளதால் இதனை அவை உரிமை மீறல் என வகைப்படுத்த இயலாது எனத் தீர்ப்பளிக்கிறேன். எனினும் பேரவையில் கலந்து கொள்வதற்காக வரும் ஒரு உறுப்பினரைத் தாக்குவது என்ற செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைத் தெரிவிப்பதோடு நீதிமன்றம் இதனை உரியவாறு விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்தப் பிரச்சினை இத்தோடு விடப்படுகிறது.

நண்பகல் 12-00

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. செ. கு. தமிழரசன், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக அளிப்பார்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவின் 113-வது, 114-வது, 115-வது, 116-வது மற்றும் 117-வது ஆகிய 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

மேலும் 115-வது, 116-வது மற்றும் 117-வது ஆகிய அறிக்கைகளுக்கு போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அவை அனுப்பி வைக்கப்பெறும்.

(ஆ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவை தலைவர்: உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா' இதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அறிக்கை.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' வார இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமைக் குழுவின் அறிக்கைகளை ஆய்வு செய்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.